SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல்,
சர்வோ ஆயில்
சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

குரோதி வருடம் மாசி 23 | மாநிலம் பயனுற! | ஹிஜிரி 1446 ரமலான் 6

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை,
திருமண மற்றும்
சுபவிசேஷங்களுக்கு அனைத்து
விதமான மாடல்களிலும்
சிறந்த முறையில் பைகள்
தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

/maalaiexpressnews

● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, மார்ச் 7, 2025 ● வெளியீடு: 8-3-2025, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 231 ● 8 பக்கம் ● ரூ.6

## தமிழ்நாடு சட்டசபையில்

# 2 சட்ட மசோதா நிறைவேற்றம்

## கவர்னர் ஒப்புதல்



**சென்னை, மார்ச் 7-**

தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஊரக உள்ளாட்சிகளுக்கு தனி அதிகாரிகள் நியமனம் மற்றும் கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரி விதிப்பது ஆகிய சட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

28 மாவட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிக்க தனி அலுவலர்களை அரசு நியமிப்பது தொடர்பான சட்ட மசோதா கடந்த ஜனவரி மாதம் நிறைவேற்றப்பட்டது. கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரி விதிப்பது தொடர்பான சட்ட மசோதா கடந்த டிசம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், 2 சட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில், அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பழுப்புக்கரி, சுண்ணாம்புக்கல், சுண்ணாம்புக்களி, மாக்னசைட், காரீயம் உள்ளிட்ட 13 வகை கனிமங்களை பெரிய வகை கனிமங்களாகவும், கரட்டுக்கல், சரளை அல்லது மண், வண்ண மற்றும் கருப்பு கருங்கல், கூழாங்கற்கள், மணல், படிகக் கல், தீக்களிமண், உருட்டு களி மண், களிமண், ஆற்று மணல், நொறுங்கிய கல், சுண்ணப்பாறை உள்ளிட்ட 17 கனிமங்கள் சிறிய வகை கனிமங்களுக்கு நிலவரி விதிக்க இந்த சட்டம் வழி வகை செய்கிறது.

இதன்படி, பெரிய கனிமங்களுக்கு ஒரு டன்னுக்கு ரூ.40 முதல் ரூ.7 ஆயிரம் வரை வரியும், சிறு கனிமங்களுக்கு ஒரு டன்னுக்கு ரூ.40 முதல் ரூ.420 வரையும் வரி நிர்ணயம் செய்யப்பட்டது. இதைத்தவிர்த்து, தமிழகத்தில் பதவிக்கலாம் முடிந்த 28 மாவட்டங்களில் உள்ள உள்ளாட்சிகளுக்கு தனி அதிகாரிகள் நியமிப்பது தொடர்பான சட்ட மசோதாவுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிடிவாதமாக இல்லை, மொழிக்கொள்கையில் தெளிவாக உள்ளது: மு.க.ஸ்டாலின்



**சென்னை, மார்ச் 7-**

முதல்–அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மத்திய பாஜக அரசுதான் மாநில உரிமைகளை மதிக்காமல், தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி தரமாட்டோம் என வீண்பிடிவாதம் பிடிக்கிறது. திமுக அரசு, அரசியல் சட்டத்தை மதிக்கினது. ஆனால், மத்திய அரசு அரசியல் சட்டத்தையே சிதைக்கும் வேலையை செய்கிறது.

திமுக எந்த மொழிக்கும் எதிரியல்ல. வலிந்து திணிக்கும் மொழிகளை மட்டுமே எதிர்க்கும். இந்தி ஆதிக்கத்தில் இருந்து இந்திய மொழிகளை காப்பது திராவிட இயக்கத்தின் மொழிக்கொள்கைதான். தாய்மொழியை காக்க தமிழகம் போட்டுத்தந்த பாதையையே பல மாநிலங்கள் பின்பற்றுகின்றன; தமிழ் உள்பட 22 மொழிகளையும் இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக்க வேண்டும்.

ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை மட்டுமே இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக்கும் முயற்சிதான் இந்தித் திணிப்பு. இதை நேரடியாக சொன்னால் தமிழ்நாட்டில் ஓட்டு வாங்க முடியாது, மக்கள் விரட்டி அடிப்பார்கள் என்பதால்தான் மும்மொழிக் கொள்கையில் இந்தியை வலியுறுத்தவில்லை என்றும், ஏதேனும் ஒரு மொழியை படிக்கலாம் என்றும் பாஜக அரசு பசப்புகிறது.

பாஜக அரசுதான் தமிழ்நாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் குடும்பத்தினர் வயிற்றில் அடிக்கிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்கமாட்டோம் எனப் பிடிவாதமாக உள்ளதால் நிதியை இழக்க வேண்டியுள்ளதே என சிலர் கேட்கிறார்கள். தமிழ்நாடு பிடிவாதமாக இல்லை, தன்னுடைய மொழிக்கொள்கை என்ன என்பதில் தெளிவாக இருக்கிறது. இன்னுயிர்த் தமிழை எந்நாளும் காப்போம்; இந்தித் திணிப்பை எதிர்ப்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மத்திய தொழிற்பாதுகாப்புப்படை ஆண்டு விழா உள்துறை மந்திரி அமித்ஷா பங்கேற்பு



**ராணிப்பேட்டை, மார்ச் 7-**

மத்திய ஆயுத போலீஸ் படைப்பிரிவில் மத்திய தொழிற்பாதுகாப்புப்படையும் ஒன்றாகும். இந்த பாதுகாப்புப்படை நாட்டின் முக்கிய அரசு, தனியார் அமைப்புகள், நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியாற்றி வருகிறது. இந்நிலையில், மத்திய தொழிற்பாதுகாப்புப்படையின் 56வது ஆண்டு விழாவை முன்னிட்டு ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் உள்ள ராஜாதித்யன் சோழன் மத்திய தொழிற்பாது காப்புப்படை பயிற்சி மையத்தில் இன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சியில் உள்துறை மந்திரி அமித்ஷா கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் தொழிற்பாதுகாப் புப்படையினரின் அணிவகுப்பை அமித்ஷா ஏற்றுக்கொண்டார்.

## தமிழக மீனவர்கள் 14 பேர் கைது இலங்கை கடற்படை அட்டூழியம்

**சென்னை, மார்ச் 7-**

தமிழகத்தை சேர்ந்த மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் சிறைபிடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வலுத்து வரும் நிலையிலும், இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவம் மட்டும் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது.

இந்நிலையில், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி பாம்பன் மீனவர்கள் 14 பேரை கைது இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும், மீனவர்களின் விசைப்படகையும் பறிமுதல் செய்துள்ளனர். இலங்கை மன்னார் தெற்கு கடற்பரப்பில் மீன் பிடித்ததாக கூறி கைது செய்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் ஒப்படைக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், மீனவர்கள் 14 பேரும் கோர்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகின்றது. இலங்கை கடற்படையால் மீனவர்கள் 14 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் சக மீனவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கோடநாடு வழக்கு: ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமியின் முதன்மை பாதுகாப்பு அதிகாரிக்கு சம்மன்

**சென்னை, மார்ச் 7-**

நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில் கடந்த 2017ம் ஆண்டு கொலை மற்றும் கொள்ளை சம்பவம் நடந்தது. இது தொடர்பாக சயான், வாளையார் மனோஜ், ஜிதின் ஜாய், சம்சீர் அலி, மனோஜ் சாமி உள்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு ஊட்டி கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் விரிவான விசாரணை நடத்தி வருகிறார்கள். 250க்கும் மேற்பட்டவர்களை கோவையில் உள்ள அலுவலகத்துக்கு நேரில் வரவழைத்து விசாரணை நடத்தி வாக்குமூலங்களை வீடியோவாக பதிவு செய்து வருகின்றனர்.

இந்த வழக்கு தொடர்பாக எஸ்டேட் மேலாளர் நடராஜன் கோவை சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நேற்று நேரில் ஆஜரானார். அவரிடம் 8 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது, சம்பவம் நடந்த அன்று அவர் எங்கு இருந்தார்? எத்தனை மணிக்கு எஸ்டேட்டுக்கு சென்று பார்த்தார்?. என்னென்ன பொருட்கள் கொள்ளை போனது? மீதி ஏதாவது பொருட்கள் இருந்ததா? என்பது உள்பட பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. அந்த கேள்விகளுக்கு எல்லாம் அவர் பதில் அளித்தார். அது வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. மீண்டும் தேவைப்பட்டால் விசாரணைக்கு அழைப்போம் என்றும், அதற்கு தவறாமல் ஆஜராக வேண்டும் என்றும் போலீசார் கூறி அவரை அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில், கோடநாடு வழக்கு தொடர்பாக எடப்பாடி பழனிசாமியின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த வீரபெருமாளுக்கு சம்மன் வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 11ம் தேதி வீரபெருமாள் விசாரணைக்கு ஆஜராக சி.பி.சி.ஐ.டி. உத்தரவிட்டுள்ளது. அப்போதைய பாதுகாப்புப் பிரிவு ஆய்வாளராக இருந்த கனகராஜ், இறுதியாக விபத்தில் உயிரிழந்த ஜெயலலிதாவின் கார் ஓட்டுநர் கனகராஜுக்கு குறுஞ்செய்தி அனுப்பியது தொடர்பாகவும், அவர் தனது சொல்போனை இதுவரை ஒப்படைக்காதது குறித்தும் உயர் அதிகாரியாக இருந்த வீரபெருமாளிடம் விசாரணை மேற்கொள்ள உள்ளதாக கூறப்படுகிறது.

## அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கட்சியில் இருந்து நீக்கம்

**திருவள்ளூர், மார்ச் 7-**

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. விஜயகுமார். இவர் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளராக செயல்பட்டு வந்தார்.

இதனிடையே, பெரியபாளையம் அருகே மஞ் சங்கரணை பகுதியில் நேற்று பாஜக சார்பில் நடைபெற்ற மும்மொழி கொள்கை ஆதரவு கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. அப்போது, அவ்வழியாக காரில் சென்ற முன்னாள் எம்.எல்.ஏ. விஜயகுமார் மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக கையெழுத்திட்டார். இந்த சம்பவம் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. விஜயகுமார் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். கட்சியின் கண்ணியத்திற்கு மாசு விளைவிக்கும் நோக்கில் கட்டுப்பாட்டை மீறியதால் விஜயகுமார் கட்சியின் பொறுப்புகளில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்படுவதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## தேர்தல் செலவின கணக்குகள் ஒத்திசைவு கூட்டம்




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்-மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், தேர்தல் செலவின பார்வையாளர் தினேஷ் குமார் ஜாங்கிட் முன்னிலையில் ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 98 ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025 தேர்தல் செலவின கணக்குகள் ஒத்திசைவு கூட்டம் நடைபெற்றது. உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையர் (பொ) தனலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் முஹம்மது குதுரத்துல்லா (பொது), வெங்கடராமன் (கணக்குகள்) உட்பட பலர் உள்ளனர்.

## தமிழகத்தில் 8 சார்பதிவாளர்கள் பணியிட மாற்றம்



**சென்னை, மார்ச் 7-**

தமிழகத்தில் 8 சார்பதிவாளர்களை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

* மத்திய சென்னை அசோக் நகர் சார்பதிவாளர் வெண்மதி, பழனி நிர்வாக சார்பதிவாளராகவும்,
* திருச்சி காட்டுப்புத்தூர் சார்பதிவாளர் வசந்தாமணி நாமக்கல் வழிகாட்டி சார்பதிவாளராகவும்,
* விருத்தாச்சலம் மாவட்ட பதிவாளர் அலுவலக நிர்வாக சார்பதிவாளர் ஏ.கே.ஜார்ஜ் பொன்னேரி தற்காலிக இணை சார்பதிவாளராகவும்,
* செங்கல்பட்டு 2 எண் இணை சார்பதிவாளர் சத்தியபிரியா திண்டிவனம் வழிகாட்டி சார்பதிவாளராகவும்,
* சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவாளர் ரங்கராஜ் திருவள்ளூர் சீட்டு மற்றும் சங்க சார்பதிவாளராகவும்,
* மன்னார்குடி சார்பதிவாளர் மஞ்ச கடலூர் அசல் பத்திரப்பிரிவு கண்காணிப்பாளராகவும்,
* கெங்கவல்லி சார்பதிவாளர் அம்பிகா திண்டுக்கல் அசல் பத்திரப்பிரிவு கண்காணிப்பாளராகவும்,
* வேப்பந்தட்டை சார்பதிவாளர் விஜயன் 1 எண் இணைசார்பதிவாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
● வெள்ளி ● மார்ச் 7, 2025

# சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மகளிர் சமுதாயம் முன்னேற்றம்: தமிழக அரசு பெருமிதம்

**சென்னை, மார்ச் 7–**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

1917ம் ஆண்டு ரஷ்யாவில் பெண்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மார்ச் 8ஆம் நாள் அங்கு மகளிர் உரிமைகள் காத்திடும் நோக்கில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. 1975ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவை மார்ச் 8ம் நாள் ஆண்டுதோறும் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்பட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நாடுகளும் உலக மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றன.

தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் மகளிர் தினத்தை மகளிர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கொண்டாடுகின்றன. தமிழ்நாட்டைப் பொருத்தவரை மகளிர் உரிமைகளைக் காப்பதற்காக முதன்முதலில் 1921ல் நீதிக்கட்சி அரசு பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. அதனைத் தொடர்ந்து திமுக அரசு அமைந்தபொழுதெல்லாம் மகளிர்க்குக் காவல்துறையில் பணிகள், சொத்துரிமை, அரசு வேலைவாய்ப்பில் 30 சதவீத இட ஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கும் மகளிர் திட்டம் முதலியவற்றுடன் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு முதலில் 33 சதவீதம் என்றும், பின்னர் 50 சதவீதம் என்றும் இடஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு பெண்கள் சமூக, பொருளாதார நிலைகளில் விடுதலை பெற்று வளம்பெறத் தொடங்கினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் பெண்கள் சமுதாயம் மேலும்மேலும் முன்னேறுவதற்கான பல புரட்சிகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்திய மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் வழிகாட்டி வருகிறார்கள்.

அரசுப் பேருந்துகளில் மகளிர், மாணவியர், மாற்றுத் திறனாளிகளுக்குக் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம், 1 கோடியே 15 லட்சம் இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000/ வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் 3 லட்சத்து 28 ஆயிரம் மகளிர்க்கு மாதம் ரூ. 1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டம், பணிபுரியும் மகளிர்க்கு திருச்சி, கூடுவாஞ்சேரி, தாம்பரம், ஓசூர், திருவண்ணாமலை, பரங்கிமலை, சேலம், வேலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், விழுப்புரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பான தோழி விடுதிகள் திட்டம் உட்பட மகளிர் சமுதாய மேம்பாட்டிற்குப் புரட்சிகரமான புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தி நிறைவேற்றி வருகிறார்கள்.

பெண்களுக்கு உரிய அங்கீகாரம் சமூகநீதி, சமத்துவம், ஆகியவற்றை அளித்திடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் “தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை” 2024ஐ முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் புதிதாக உருவாக்கி கடந்த 21.2.2024 அன்று வெளியிட்டார்கள்.

பல்வேறு மகளிர் திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ், இதுவரை 1 லட்சத்து 26 ஆயிரத்து 637 மகளிர்க்கு 1,047 கோடி ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கியுள்ளார்கள். இதில் 68 ஆயிரத்து 927 மகளிர்க்கு 8 கிராம் தங்க நாணயங்களுடன் நிதியுதவிகளும்; 57 ஆயிரத்து 710 மகளிர்க்கு நிதியுதவிகளும் வழங்கப்பட்டு மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில் 31.3.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த கடன் தொகை ரூ.2,755.99 கோடி தள்ளுபடி செய்தார். இதில் 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்பெற்றனர்.

அரசுப் பணிகளில் மகளிர்க்கான இடஒதுக்கீடு 30 சதவீதம் என்பதை 40 சதவீதமாக உயர்த்தி மகளிர் பலர் அரசு அலுவலகங்களில் கூடுதல் வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

அரசுப் பணிகள் புரியும் மகளிர்க்கான மகப்பேறு விடுப்பு 9 மாதம் என்பது 12 மாதங்களாக 2021ஆம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளார்கள்.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.12 லட்சம் என்பது ரூ.20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1,25,167 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6,265.41 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் நலனில் அக்கறை கொண்டு 13,003 மகளிர்க்கு 5 சதவீத வட்டியில் ரூ.35.35 கோடி கடன் வழங்கியுள்ளார்.

பெண்களைத் தொழில் முனைவோராக்கிடும் நோக்கில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் TANSEED (Tamil Nadu Startup Seed Grand Fund) திட்டம் வாயிலாக புத்தொழிலை ஊக்குவித்திட பெண் தொழில் முனைவோரின் புத்தொழில்களுக்கு 15 லட்சம் ரூபாய் வரை மானிய நிதி வழங்குகிறார்.

திருக்கோவில்களில் 11 பேர் பெண் ஓதுவார்களாக நியமிக்கப்பட்டு மகளிர் சமுதாயம் போற்றப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் மனக் கவலை தீர்க்கும் மாமருந்தாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 17 சிப்காட் தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்களைத் தொடங்கியுள்ளது. இந்த 17 தொழிற் பூங்காக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்களில் ஏறத்தாழ 3 லட்சத்து 23 ஆயிரம் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

இத்தகைய புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி, தொடர்ந்து பல்வேறு வகையிலும் மகளிர்க்கான சலுகைகளை வழங்கி வருவதால், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மகளிர் சமுதாயம் அடைந்து வரும் முன்னேற்றங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்றன. இந்த வரலாற்று நிகழ்வுகளை நாளைய உலகம் போற்றும் என்பது திண்ணம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மேலநத்தம் முதல் தருவை வரை தாமிரபரணி ஆற்றில் தூய்மைப்படுத்தும் பணி

## அமைச்சர் நேரு தொடங்கி வைத்தார்



**திருநெல்வேலி, மார்ச் 7–**

திருநெல்வேலி மாவட்டம் மேலநத்தம் முதல் தருவை வரை தாமிரபரணி ஆற்றில் தூய்மைப்படுத்தும் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. இரா.சுகுமார், இ.ஆ.ப., அவர்கள், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.அப்துல் வஹாப் அவர்கள், மாநகராட்சி மேயர் திரு.கோ. ராமகிருஷ்ணன் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஒ.சுகபுத்ரா இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.கே.ஆர்.ராஜூ அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (06.03.2025) தொடங்கி வைத்தார்கள்.

தாமிரபரணி ஆற்றில் காணப்படும் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி மாநகராட்சி பகுதியில் குறுக்குத் துறை முதல் நாரணம்மாள்புரம் வரை இரண்டு கட்டங்களாக 14 கி.மீ தொலைவிற்கு தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் கடந்த ஆண்டு நடந்து முடிந்துள்ளது. இந்த ஆண்டு தொடர்ந்து இன்று மேலநத்தம் பகுதியில் இருந்து தருவை வரை 8 கி.மீ தொலைவிற்கு தாமிரபரணி ஆற்றின் இரு புறங்களிலும் தூய்மைப்படுத்தும் பணிகளை தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணிக்காக கோ மட்சு நிறுவனம் எக்ஸ்னோரா நிறுவனத்தின் மூலம் ஹிட்டாச்சி எந்திரம் இலவசமாக வழங்கியுள்ளது. மேலும் நம் தாமிரபரணி அமைப்பு உதவியுடன் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், தாமிரபரணி கரையோரமாக காணப்படும் சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு நதிக்கரையின் வெளிப்புறமாக நமது பாரம்பரிய மரமான நீர் மருது மரக்கன்றுகள் நட்டு நடும்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று ராணி அண்ணா மகளிர் கலை கல்லூரி மாணவியர்கள் தாமிரபரணி ஆற்றில் தூய்மைப்படுத்தும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் ஆகியோர் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அருகில் ரவுண்டானா முதல் ஏ.ஆர்.லைன் தீயணைப்பு அலுவலகம் வரை சாலை விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கிறித்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் திருமதி. விஜிலாசத்தியானந்த் அவர்கள், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா. ஆவுடையப்பன் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு.டிபி.எம்.மைதீன்கான் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா அவர்கள், நெடுஞ் சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட பொறியாளர் திரு.ராஜசேகர் உதவி கோட்ட பொறியாளர் திரு.சண்முகநாதன் அவர்கள், உதவி பொறியாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள், தனி வட்டாட்சியர் கே.பிள்.டிவி திரு.செல்வம் அவர்கள், நம் தாமிரபரணி அமைப்பின் திரு. நல்லபெருமாள், திரு.அமரவேல் பாபு திரு.வித்யா சேகர், வி.எம்.சத்திரம் டெவலப்மென்ட் டிரஸ்ட், எக் பவுண்டேஷன், ராணி அண்ணா கல்லூரி மாணவிகள் மற்றும் திரளான பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்




**நாமக்கல், மார்ச் 7–**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், மல்லசமுத்திரம் மேல்முகம், மங்களம் ஊராட்சிகள், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், சத்திநாயக்கன்பாளையம் ஊராட்சி மற்றும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பள்ளக்காப்பாளையம், குப்பாண்டம்பாளையம் உள்ளிட்ட ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச. உமா, தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு 143 பயனாளிகளுக்கு ரூ.83.93 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் என்பது வெறும் காகிதம் அல்ல. அவர்களின் இரத்தம் மற்றும் வியர்வை என்று தெரிவித்துள்ளார்கள். அதன்படி பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை நிறைவேற்றிடவும், ஏழை, எளிய, பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்ட விளிம்பு நிலையில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவும், கோரிக்கைகளை நிறைவேற்றவும் தனிகவனம் செலுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு துறையினர் மக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே முகாம்கள் நடத்திட கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனைத்தொடர்ந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் அதிக அளவில் வசிக்கும் கிராம ஊராட்சிகளில் “மக்களுடன் முதல்வர்” முகாம் 3ம் கட்டமாக நடத்த உத்தரவிடப்பட்டுள்ளார்கள். இம்முகாம்களின் முக்கிய நோக்கமானது பொதுமக்கள் தங்களுக்கு தேவையாக கோரிக்கைகளை பெற அரசுஅலுவலகங்களுக்கு செல்வதையும், போக்குவரத்து செலவு, கால விரையம், பொருட்செலவு ஆகியவற்றை தவிர்த்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசை தேடி மக்கள் சென்ற நிலையை மாற்றி மக்களைத் தேடி அரசு இயந்திரம் செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை செயல்படுத்தினார்கள்.

இன்றைய தினம் மல்லசமுத்திரம் மேற்கு, மங்களம், சத்திநாயக்கன்பாளையம், பள்ளக்காப்பாளையம் மற்றும் குப்பாண்டம்பாளையம் உள்ளிட்ட 5 ஊராட்சிகளில் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகள் சார்ந்த 44 வகையான சேவைகள் வழங்கும் வகையில் சிறப்பு முகாம்கள் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே நடத்தப்படுகிறது. இம்முகாம்களில் மின் இணைப்பு பெயர் மாற்றம், வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், பட்டா உட்பிரிவு மாறுதல், கடனுதவி, பல்வேறு சான்றிதழ்கள், உதவித்தொகை, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீதும் தீர்வு வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்கள் பயன்பெற கூடிய மற்றும் மாதம் ரூ.1,500 முதல் ரூ.2,000/ வரை சேமிக்க கூடிய சிறப்பான திட்டங்களாகும். குறிப்பாக மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா இலவச விடியல் பயணம் மூலம் சுமார் ரூ.800/ வரையும், மகளிர் உரிமை தொகை மாதம் ரூ.1,000/வழங்கும் திட்டத்தின் மூலம் வருடத்திற்கு ரூ.12,000/ வரையும் சேமிக்க முடிகிறது. ஏழை, எளிய மாணவ, மாணவியர்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் புதுப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்கள் மூலம் 3 ஆண்டுகளுக்கு ரூ.36,000/ வரை கல்வி உதவித்தொகை வழங்கி வருகின்றார்கள்.

மேலும், பொதுமக்களின் உடல்நலன் காக்க மக்களைத் தேடி மருத்துவம், கொரோனா காலத்தில் மாணவர்களின் கல்வியை பாதுகாக்க இல்லம் தேடி கல்வி, ஏழை, எளிய மாணவர்களின் பசியை போக்கி அவர்கள் கல்வியில் கவனம் செலுத்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தாய் உள்ளத்தோடு, ஒரு தந்தையாகவும், சகோதராகவும் செயல்படுத்தி வருகின்றார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை கலைஞர் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பராமரிப்பு திட்டம், பிரதான் மந்திரி கிராம குடியிருப்பு திட்டம், சாலை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சிறுபாலம் அமைத்தல், சுகாதார பணிகள், தடுப்பணை, விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் மல்லசமுத்திரம் மேல்முகம் ஊராட்சியில் ரூ.7.07 கோடி மதிப்பீட்டில் 199 திட்டப்பணிகள், மங்களம் ஊராட்சியில் 5.6.68 கோடி மதிப்பீட்டில் 185 திட்டப்பணிகள், சக்திநாயக்கன்பாளையத்தில் ரூ.6.21 கோடி மதிப்பீட்டில் 332 திட்டப்பணிகள், பள்ளக்காக்கப்பாளையம் ஊராட்சியில் ரூ.4.54 கோடி மதிப்பீட்டில் 159 திட்டப்பணிகள் மற்றும் குப்பாண்டம்பாளையம் ஊராட்சியில் ரூ.3.11 கோடி மதிப்பீட்டில் 107 திட்டப்பணிகள் என மொத்தம் 5 ஊராட்சிகளில் 982 திட்டப்பணிகள் சுமார் ரூ.27.60 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம், தொழிலாளர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் தாட்கோ உள்ளிட்ட அரசுத்துறைகள் சார்பில் மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், மல்லசமுத்திரம் மேல்முகம் ஊராட்சி, சத்யா நகரில் 29 பயனாளிகளுக்கு ரூ.6.57 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், மங்களம் ஊராட்சியில் 30 பயனாளிகளுக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், சத்திநாயக்கன்பாளையம் ஊராட்சி, கோவில்பாளையத்தில் 28 பயனாளிகளுக்கு ரூ.10.71 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பள்ளக்காப்பாளையம் ஊராட்சியில் 22 பயனாளிகளுக்கு ரூ.19.60 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் குப்பாண்டம்பாளையம் ஊராட்சியில் 34 பயனாளிகளுக்கு ரூ.35.05 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 143 பயனாளிகளுக்கு ரூ.83.93 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாம்களில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் சே.சுகந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரவிச்சந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வெ.முருகன், முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விழிதியூரில் சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டண வசூல் மையம் 10ந் தேதி முதல் செயல்படும்

## நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அறிவிப்பு

காரைக்கால், மார்ச் 7-

காரைக்காலை அடுத்த விழிதியூர் கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று, விழிதியூரில் சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டண வசூல் மையம், வரும் பத்தாம் தேதி முதல் செயல்படும் என நிரவி கொம்யூன் பஞ் சாயத்து ஆணையர் இளமுருகன் அறிவித்துள்ளார்.

காரைக்காலை அடுத்த நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் இளமுருகன் இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: விழிதியூர் கிராம பஞ் சாயத்து பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, வருகிற 10.03.2025 முதல், திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமை ஆகிய வாரத்தில் 3 நாட்கள் காலை 9.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை விழிதியூர், பி டி ஓ அலுவலக வளாகத்தில் செயல்படும். ஆகவே, இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வில்லியனூர் ஆயுஷ் மருத்துவமனையில் மகளிர் தின விழா எதிர்க்கட்சித் தலைவர் சிவா பங்கேற்பு




புதுச்சேரி, மார்ச் 7-

வில்லியனூர் ஆயுஷ் மருத்துவமனையின் சித்த மருத்துவப் பிரிவு மற்றும் புதுச்சேரி இம்ப்காப்ஸ் மருத்துவமனை இணைந்து மகளிர் தின விழாவை ஆயுஷ் மருத்துவமனை வளாகத்தில் கொண்டாடியது. விழாவிற்கு சித்த மருத்துவப் பிரிவு தலைமை மருத்துவர் இந்திரா தலைமை தாங்கினார். ஆயுஷ் இயக்குநர் டாக்டர் ஸ்ரீதரன் நோக்கவுரை ஆற்றினார். விழாவில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றும் 100–க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அவர்களின் உடல் நலனை மேம்படுத்தும் அமுக்கரா சூரணம், கீழா நெல்லி மாத்திரை மற்றும் வலி நிவாரணிகள் அடங்கிய மருந்து பெட்டகத்தை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

விழாவில் புதுச்சேரி இம்ப்காப்ஸ் நிறுவனத்தின் மருத்துவர்கள் ஸ்ரீதர், கல்பனா, சசிகலா, மருந்தாளுர்கள் ரேவதி, பிரியா மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர் தர்மராஜ், அவைத்தலைவர் ஜலால் அணிப், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், தொமுச தலைவர் அங்காளன், தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், ஏழுமலை, மற்றும் சபரி, ராஜி, ரபீக், மில்ட்ரி முருகன், தங்கராசு, சேகர், காசிநாதன், முரளி, முருகேசன், கோவிந்தராஜ்,,பரதன், பிரவீன், அபிமன்னன், காளிதாஸ் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

### புதுச்சேரி மாநில திமுக சார்பில்

# பேராசிரியர் க.அன்பகழன் 5-ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு மாநில அமைப்பாளர் சிவா தலைமையில் திமுகவினர் மலரஞ்சலி



புதுச்சேரி, மார்ச் 7-

பேராசிரியர் க.அன்பகழன் நினைவு நாளையொட்டி, புதுச்சேரி மாநில திமுக சார்பில், மாநில அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ., தலைமையில் திமுக நிர்வாகிகள் அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் பேராசிரியர் பெருந்தகை க. அன்பகழன் அவர்களின் 5ரு ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் மாநில திமுக சார்பில் நடந்த நிகழ்ச்சியில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மாநில அமைப்பாளர் இரா. சிவா, எம்.எல்.ஏ., தலைமையில் திமுகரு வினர் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் அ. தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், ஜே.வி.எஸ். ஆறுமுகம், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், எஸ். தர்மராஜன், ஆர். ரவீந்திரன், மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், எஸ். அமுதா குமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், பி.சா. இளஞ் செழியபாண்டியன், சே. ராதாகிருஷ்ணன், சி. சத்தியவேலு, அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கி யராஜ், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், வர்த்தகர் அணி தலைவர் செல்வமுத்து குமார விநாயகம், பொறியாளர் அணித் தலைவர் பூபாலன், குரு (எ) சண்முகசுந்தரம், தேவேந்திரன், எம்.எஸ். முரளி, கலிவரதன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தாமரைக்கண்ணன், முகிலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அங்கன்வாடி மையம் கட்டுமான பணிகளை ஆட்சியர் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டம் இளம்புவனம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# தடையில்லா மின்சாரம் வழங்க ஆர்.எம்.யூ கருவியின் செயல்பாட்டினை அமைச்சர் துவக்கி வைத்தார்



வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு கருங்கல்பாளையம், காந்திசிலை அருகில் உள்ள 3 உயர் மின் அழுத்த கம்பங்களை அகற்றி ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தொழில்நுட்பத்தில் ஆர்.எம்.யூ என்னும் கருவியின் மூலம் தடையில்லா மின்சாரம் வழங்கும் பொருட்டு, இயந்திரத்தின் செயல்பாட்டினை துவக்கி வைத்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேற்பார்வை பொறியாளர்(ஈரோடு) கலைச்செல்வி, செயற்பொறியாளர் (நகரியம்) சண்முகசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

# 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தை ஆட்சியர் ஆய்வு



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சேர்க்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் 12 ஆம் வகுப்பு (ஆங்கிலம் பாடம்) பொதுத்தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் வே. இரா.சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 6,040 பயனாளிகளுக்கு ரூ.213.21 கோடி மதிப்பில் வீடு கட்டுவதற்கான ஆணை வழங்கல்

**நாமக்கல், மார்ச் 7–**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், இலுப்புலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, 31 பயனாளிகளுக்கு ரூ.20.05 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை எய்திடும் வகையில் முதற்கட்டமாக, 2024–25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் ஒவ்வொன்றும் 3.50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் முறையாக கணெக்கடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வெளிப்படையான முறையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தகுதி உள்ள அனைவருக்கும் வீடு கட்ட ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 3 தவணையாக தொகை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. கூடுதல் தொகை தேவைப்படுவர்களுக்கு ரூ.1.00 இலட்சம் வரை வங்கியில் கடனுதவி வழங்கப்படுகிறது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தகுதியுள்ள பயனாளிகள் விடுபடாதவகையில் அனைவருக்கும் வீடுகட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலேயே அதிக பயனாளிகள் நம் நாமக்கல் மாவட்டத்தில் தான் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 6,040 பயனாளிகளுக்கு ரூ.213.21 கோடி மதிப்பில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் இலுப்புலி சேர்ந்த ராமசாமிக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கினார். நிறைந்தது மனம் நிகழ்ச்சியின் கீழ், வீடு கட்டுவதற்கான ஆணையினை பெற்ற பயனாளி ராமசாமி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

# சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் மாணவர்களுக்கு பணிநியமன ஆணையை ஆட்சியர் வழங்கினார்



**கன்னியாகுமரி, மார்ச் 7–**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம். நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து நடத்திய சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்து கொண்டு, தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கி பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டிற்குட்பட்ட நகர்புற மற்றும் கடைகோடி கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்கு பொது நிறுவனங்கள், தனியார் தொழில்நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் சார்பில் வேலை வழங்கும் நோக்கில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்புத்துறை. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி தகுதியானவர்களுக்கு உடனடியாக பணிஆணை வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நேற்றைய தினம் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாமில் கங்கைகொண்டான் டாடா பவர், போஷ் நிறுவனம் ஃப்ளோ குளோபல் ஆழ்த்தி சொலுஷன்ஸ், ஆர்ஷெல் பிசினஸ் சொலுஷன்ஸ், பிடிம் டெக்னாலஜிஸ், ஃகிலோவின் டெக்னாலஜிஸ் ஆகிய பத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் 700 பேர் பதிவு செய்து 500 பேர் கலந்துக்கொண்டார்கள். குறிப்பாக டாடா பவர் நிறுவனம் 75 நபர்களையும், பிரிகால் பிரிஷன் நிறுவனம் 57 நபர்களையும், டி.வி.எஸ். நிறுவனம் 75 நபர்களையும். ஆழ்த்தி சொலுஷன்ஸ் நிறுவனம் 2 நபர்களையும், ஆர்ஷெல் பிசினஸ் சொலுஷன்ஸ் நிறுவனம் 20 நபர்களையும், பிடிம் டெக்னாலஜிஸ் 10 நபர்களையும், ஈத்தா மொழி கயிறு நிறுவனம் 1 நபரையும், அஜைல் டிரைப்ஸ் நிறுவனம் 1 நபரையும் தேர்வுச்செய்தனர். பணியாணை பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இம்முகாமில் கலந்துகொண்ட அனைவரும் பல்வேறு போட்டித்தேர்வுகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களில் தொடர்ந்து கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வளர்த்து வாழ்வில் ஏற்றம் பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இதுவரை நடைபெற்ற மொத்த முகாம்களில் 27 நிறுவனங்கள் கலந்துக்கொண்டு 600 பேருக்கு மொத்தமாக பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலக உதவி இயக்குநர் திரு.லட்சுமிகாந்தன், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்க திருநெல்வேலி மண்டல திட்ட மேலாளர் ராகுல், கோயம்புத்தூர் மண்டல திட்ட இணை மேலாளர் ராஜசேகர் பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த மனித வள அலுவலர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# ராகுல் காந்திக்கு ரூ. 200 அபராதம் விதித்த லக்னோ நீதிமன்றம்

**லக்னோ, மார்ச் 7–**

மகாராஷ்டிர மாநிலம், அலோகாவில் கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம், பாரத் ஜோடோ நடைப்பயணத்தின் போது செய்தியாளர்களுடன் பேசும்போது சாவர்க்கர் குறித்து ராகுல் காந்தி அவதூறு கருத்து தெரிவித்ததாக லக்னோ மாவட்டத்தில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

தேசியவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான சாவர்க்கர் குறித்து திட்டமிட்டு அவதூறு கருத்துகளை ராகுல் காந்தி பரப்பியதாகவும், அந்த பேட்டி ஊடகங்களில் பரவலாக ஒளிபரப்பட்டதாகவும் வழக்கறிஞர் நிர்பேந்திர பாண்டே தாக்கல் செய்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ராகுல் காந்தியை



விசாரணைக்கு நேரில் ஆஜராக லக்னோ நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் வெளிநாட்டு பிரமுகரை சந்திக்க முன்பே திட்டமிடப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியுள்ளதால், ராகுல் காந்தி நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு கோரி அவரது வழக்கறிஞர் மனு அளித்தார்.

இந்த மனுவை நிராகரித்த கூடுதல் தலைமை நீதித்துறை நீதிபதி அலோக் வர்மா, நேரில் ஆஜராக தவறியதற்காக ராகுல் காந்திக்கு ரூ. 200 அபராதம் விதித்து உத்தரவிட்டார். மேலும், வழக்கின் விசாரணையை ஏப்ரல் 14ம் தேதிக்கு ஒத்திவைத்தார். இதே குற்றச்சாட்டில் புனே நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ராகுல் காந்திக்கு ஜாமீன் வழங்கப்பட்டு, நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாலமலையில் புதிய தார்சாலை அமைப்பது குறித்து ஆட்சியர் ஆய்வு

**சேலம், மார்ச் 7–**

சேலம் மாவட்டம். கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை கிராமத்தில் புதிய தார்சாலை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: அரசின் திட்டங்கள் மலைவாழ் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் முழுமையாக சென்றடையும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், இன்றைய தினம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பாலமலைக்கு சாலை வசதியை நீட்டிப்பு செய்து புதிய சாலை அமைத்துத்தருவது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பாலமலையானது பழங்குடியினர் மக்கள் வசிக்கும் காப்புக்காடுகள் நிறைந்த வனப்பகுதியாகும்.



இப்பாலமலை ஊராட்சியில் 18 குக்கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு 4,257 மக்கள்தொகையும், 1354 குடியிருப்புகளும் அமைந்துள்ளன. இவர்களது பிராதன தொழில் விவசாயம் மற்றும் விவசாய கூலித்தொழில் ஆகும். இங்கு விளையும் பொருட்களைக் சந்தைக்கு கொண்டு செல்லவும், உயர் படிப்பிற்குச் செல்லவும், மருத்துவ வசதிக்கு குருவரெட்டியூர், கொளத்தூர் சென்று வரவும், இவர்களுக்கு சாலை வசதி மிக அவசியமான தேவையான அமைந்துள்ளது.

இப்பகுதியினைச் சார்ந்த மக்களின் 75 ஆண்டு கால கனவாக சாலை வசதி இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டில் மண் சாலையாக அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வந்த நிலையில் கடந்த 03.04.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் முதற்கட்டமாக கண்ணாமூச்சி பிரிவு முதல் 4.8 கி.மீ தூரம் வரை கப்பிச்சாலை அமைப்பதற்கான பணி 1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள 2.3 கி.மீ நீளத்திற்கும் சாலை அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், கண்ணாமூச்சி பிரிவு முதல் கெம்மம்பட்டி வரையிலான 7.1 கி.மீ நீளம் முழுமைக்கும் தார்சாலை வசதி ஏற்படுத்தித் தருவதன் மூலம் இங்கு வசிக்கும் பொதுமக்கள் தங்களது அன்றாட பணிகளை மேற்கொள்ள எளிதாக சென்றுவர பேருந்து வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் கிடைக்கப்பெறும் என்பதால் அமைத்திடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இன்றையதினம் தார்சாலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் பாலமலையில் உள்ள பழங்குடியினர் உண்டு சமையலறைக்கூடத்தில் சுகாதாரமாகவும், லிஐமிஜி 6000 61, சுவையாகவும் உறைவிடப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவிகளுக்கு தயார் செய்யப்படும் உணவு தயார் செய்யப்படுகிறதா என்பது குறித்தும், நியாயவிலைக்கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் மற்றும் குறித்த நேரத்தில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் பொதுமக்களிடம் கேட்டறிந்தார். அதேபோன்று ராமன்பட்டியில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளின் கல்வித்திறன், வருகைப்பதிவேடுகள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது, மேட்டூர் வருவாய் வட்டாட்சியர் ரமேஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வன உரிமை சட்டம் குறித்து ஆலோசனை கூட்டம்

**திருவண்ணாமலை, மார்ச் 7–**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தலைமையில், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அண்ணாதுரை, சிஎல்எஸ் முன்னிலையில் ஜமுனாமரத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வன உரிமைச் சட்டம் 2006 குறித்து வனக்குழுத் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.





வன உரிமைகள் சட்டம் (திஸிகி) 2006 என்பது, பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனவாசிகளின் வன உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டமாகும். இச்சட்டம் தொடர்பாக இன்றையதினம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜமுனாமரத்துரில் பழங்குடியினர் நலத்துறை சார்பாக வன உரிமைச் சட்டம் குறித்து முன்னாய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 11 கிராம ஊராட்சியை சேர்ந்த 272 வனக்குழு நிர்வாகிகள் பங்கேற்றனர். வன உரிமைச் சட்டத்தின் செயல்பாடுகள், வனப்பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு இச்சட்டம் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டது. மேலும் பட்டாக்கள், கிராம சபை குறித்தும், பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் கீழ் உள்ள கிராம சபை மற்றும் வன உரிமைச் சட்டத்தின் கீழ் உள்ள கிராம சபை குறித்தும், கிராம சபையின் உறுப்பினர்கள், வனக்குழுவில் உள்ள உறுப்பினர்கள், இக்குழுவின் செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பழங்குடியினர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். இக்கூட்டத்தில் ஆரணி வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம் திருமதி கலைசெல்வி, உதவி வன பாதுகாவலர் திரு. வினோத், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழக அரசின் சாதனைகள் குறித்து புகைப்பட கண்காட்சி



திருவண்ணாமலை, மார்ச் 7-

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருத்துவாம்பாடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகையில் உள்ள புகைப்பட தொகுப்பினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு துறைகளில் எண்ணற்ற அரசு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அறியும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் புகைப்பட தொகுப்புக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்றையதினம் திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருத்துவாம்பாடி ஊராட்சியில் தமிழக அரசின் சாதனைகள், நலத்திட்டங்களை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் புகைப்பட தொகுப்பு காட்சிப்படுத்தப்பட்டது. இப்புகைப்பட கண்காட்சியில், திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள அரசின் திட்டங்கள் குறித்த தொகுப்பும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற முக்கிய நிகழ்வுகள், அரசின் நலத்திட்ட உதவிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டங்கள் உள்ளிட்ட விளக்க புகைப்பட தொகுப்புகளை ஏராளமான பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டு, அரசின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து அறிந்து கொண்டனர்.

# வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம்




திருவண்ணாமலை, மார்ச் 7-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தலைமையில் ஜமுனாமரத்தூர், போளூர், சேத்பட் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சிதிட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் ஜமுனாமரத்தூர், போளூர், சேத்பட் ஊராட்சி ஒன்றியம் அலுவலகங்களில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சிதிட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்தும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான கலைஞரின் கனவு இல்லம், ஊரக குடியிருப்பு பழுது நீக்கம் செய்யும் திட்டம், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், இலங்கைத் தமிழர்கள் வீடுகட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி ஜன்மன் திட்டத்தில் வீடு கட்டும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வுமேற்கொண்டார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், தூய்மை பாரத இயக்கத் திட்டம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஊராட்சிகள் வாரியாக ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் முன்னேற்றம் குறித்தும், பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடிக்கவும் துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். தொடர்ந்து, சேத்பட் ஊராட்சி ஒன்றிய அலுவலத்தில் உள்ள இசேவை மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மனுக்கள் முறையாக பதிவு செய்யப்படுகின்றதா எனவும், மேலும் பொதுமக்களிடம் குறைகள் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும் ஆய்வுக்கூட்டத்தை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சேத்துப்பட்டு பேரூராட்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு, மருந்துகளின் இருப்பு விவரம் குறித்தும், பாம்பு கடி மற்றும் விஷக்கடிகளுக்கான மருந்துகளின் இருப்பு விவரம் குறித்தும், கர்ப்பிணிகளுக்கு முறையாக சிகிச்சை அளிக்கப்படுகிறதா என மருத்துவர்களிடமும், சிகிச்சை முறைகள் குறித்து நோயாளிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, சேத்துப்பட்டு ஆதிதிராவிடர் நல அரசினர் மாணவியர் விடுதியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவிகளிடம் உணவு முறைகள், குடிநீர் மற்றும் கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து, பள்ளியில் கற்கும் மாணவிகளுக்கு கையேடு வழங்கப்படுகிறதா என மாணவிகளிடம் கேட்டறிந்தார்கள். மேலும் உணவுகளை தரமாகவும், சுத்தமாகவும், சுகாதாரமாகவும் சமைக்க அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.கிருஷ்ணன், செயற்பொறியாளர் திரு.இளங்கோ, உதவி திட்ட அலுவலர்கள், ஜமுனாமரத்தூர், போளூர், சேத்பட் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆலோசனை கூட்டம்




திருநெல்வேலி, மார்ச் 7-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நபார்டு வங்கியின் 2025–2026 ஆண்டிற்கான மாவட்ட வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டார்கள். 2025–2026 அறிக்கையின்படி முன்னுரிமை கடன் இலக்கு ரூ.18,059.28 கோடியாக அளவீடு செய்யப்பட்டுள்ளது. அதில் விவசாயத்திற்கான கடன் வாய்ப்பு ரூ.14537.87 கோடி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் கடன் வாய்ப்பு ரூ.2864.76 கோடி, ஏற்றுமதி கடன் வாய்ப்பு ரூ.1.50 கோடி, கல்வி கடன் தொகை கடன் வாய்ப்பு ரூ.31.43 கோடி வீட்டு வசதிக்கான கடன் வாய்ப்பு ரூ.283.04 கோடி, சமூக உள்கட்டமைப்புக்கான கடன் வாய்ப்பு ரூ.3.05கோடி, பசுமை ஆற்றல்கான கடன் வாய்ப்பு ரூ.4.50 கோடி, பிற கடன் தொகை வாய்ப்பு ரூ.333.14 கோடி என்று இலக்கு அளவீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார் வெளியிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கணேஷ் மணிகண்டன், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னோடி மாவட்ட அலுவலர் ராதா கிருஷ்ணன், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் சசி குமார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் பாஸ்கரன், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) முருகன், மாவட்ட மேலாளர்(தாட்கோ) பாஸ்கரன், மாவட்ட செயல் அலுவலர்(வாழ்ந்து காட்டுவோம்) கணபதி, திட்ட அலுவலர் ஜிழிஷிஸிளி தமிழ்நாடு ஊரக வாழ்வாதாரம் இயக்கம் இலக்குவன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் ரிச்சர்ட் ராஜ் மற்றும் வங்கி அலுவலர்கள், சம்மந்தபட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## திருச்சி குழுமாயி அம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம்



திருச்சி குழுமாயி அம்மன் குட்டிக்குடி திருவிழாவை முன்னிட்டு புத்தூர் நால்ரோடு அருகே இளைய அன்பிலாரின் அன்புத் தம்பிகள் குழு சார்பில் 14ம் ஆண்டு மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்த அன்னதானத்தை புத்தூர் மீன் மார்க்கெட் சங்கத் தலைவர் சரவணன் தொடங்கி வைத்தார். விழா கமிட்டி உறுப்பினர்கள் புத்தூர் கே.கணேஷ். எம்.பி.ஏ, மீன் மார்க்கெட் கே. ரமேஷ்.உள்ளிட்ட பலர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர். அன்னதானத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சாப்பிட்டபின் அன்னதான ஏற்பாட்டாளர்களை வாழ்த்தி சென்றனர் .

# கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தலோசனை கூட்டம்

கன்னியாகுமரி, மார்ச் 7-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வெங்கடேஷ், துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 31.01.2025 அன்று நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம்ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சியில் முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் அய்யன் திருவள்ளுவர் சிலையை சென்றடையவும், படகு சவாரி வசதியை மேம்படுத்துவதற்காக 3 புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும் என அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணிகள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி மைய கூட்டரங்கில் நெடுஞ் சாலைத்துறை சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கும் சுவாமி விவேகனாந்தர் பாறைக்கும் நெடுஞ் சாலைத்துறையினரால் கண்ணாடி இழைப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மேலும் 3 பயணிகள் படகுகள் வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்கள்.

மேலும் கண்ணாடி இழை தரைத்தள பாலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்ததைத்தொடர்ந்து கன்னியாகுமரிக்கு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்து அய்யன் திருவள்ளுவர் சிலையினை கண்டுகளிப்பதோடு, கண்ணாடி இழை தரைத்தளபாலம் வாயிலாக நடந்து சென்று கடலின் அழகினை கண்டு பெருமிதம் அடைகின்றனர். மேலும் விடுமுறை நாட்களில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகை புரிவதால் சுற்றுலாப்பயணிகளின் வசதிக்காக பூம்புகார் கப்பல் 3 பயணிகள் படகுகள் வாங்கப்படவுள்ளது.



தற்போது உள்ள பயணிகளின் படகுகளின் தன்மைகள் குறித்தும், உறுதித்தன்மை குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. தொடர்ந்து சுற்றுலாப்பயணிகளின் வசதிக்காக ஆன்லைன் மூலமாக நுழைவுச்சீட்டு வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக புதுப்பிக்கப்பட்ட புதிய இணையத்தளம் விரைவில் துவக்கப்பட்டு, சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இவ்வாறு பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வெங்கடேஷ், தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை கோட்டபொறியாளர் சத்தியமூர்த்தி. துணை இயக்குநர் மீன்வளத்துறை சின்னகுப்பன், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ். உதவி இயக்குநர் பேரூராட்சிகள் இராமலிங்கம், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலளார் ஆறுமுகம், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# பாத்தம்பட்டி ஸ்ரீ ராஜகணபதி கோயிலில் வருடாபிஷேக விழா







**புதுக்கோட்டை, மார்ச் 7-**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள பாத்தம்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ ராஜகணபதி ஆலயத்தின் ஐந்தாம் ஆண்டு வருடாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சுவாமிக்கு 16 வகையான பால், பழம் உள்பட 16 வகையான திரவிய பொடிகளால் ஆன சிறப்பு அபிஷேகம் தீப ஆராதனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மதியம் அன்னதானமும் இரவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் முன்பாக 108 திருவிளக்கு பூஜையும் நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா ஏற்பாடுகளை பாத்தம்பட்டி கிராம பொதுமக்கள் இளைஞர்கள் செய்திருந்தனர்.

## காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில்

# சிறுதானியங்களை மதிப்புக்கூட்டுதல் குறித்து சிறப்பு பயிற்ச்சி முகாம்




**காரைக்கால், மார்ச் 7-**

காரைக்காலை அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், சிறுதானியங்களை மதிப்புக்கூட்டுதல் குறித்து சிறப்பு பயிற்ச்சி முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்காலை அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், "சிறுதானியங்களை மதிப்புக்கூட்டுதல்" பற்றிய பயிற்சி முகாம், அங்கன்வாடி பணியாளர்களுக்கு நேற்று சிறப்பாக நடத்தப்பட்டது.

இப்பயிற்சி முகாமை, வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். சு.ரவி துவக்கி வைத்து பேசியதாவது: இன்றைய வாழ்வியல் சூழலில் மிகப்பெரிய நோயாக கருதப்படுவது சர்க்கரை நோய், உடல் பருமன் மற்றும் சத்துப் பற்றாக்குறை ஆகும். இந்நோய்களிடமிருந்து நமது உடலை பாதுகாக்க சிறுதானியங்களை உணவாக பரிந்துரைக்கின்றனர் மருத்துவர்கள். சிறுதானியத்திலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக சிறுதானிய பிஸ்கட், ரொட்டி, லட்டு, அவுல், மிக்சர் ஆகிவை தயாரிக்கலாம். மேலும் சிறுதானியதுடன் நிலக்கடலை, காராமணி மற்றும் பயிறு வகைகளையும் சேர்த்து எடுத்துக் கொள்ளும் பொழுது உடலுக்கு தேவையான புரத சத்துக்களை பெறலாம். மேலும் அன்றாட உணவில் முருங்கைக் கீரையை உணவாக பயன்படுத்துவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், இதனை மகளிர் குழுவினர் வியாபார நோக்கிலும் செயல்படுத்த முன் வரலாம் எனக் கூறினார்.

இப்பயிற்சியில் நிலையத் தொழில்நுட்ப வல்லுநர் ஆனந்தி (மனையியல் பிரிவு) சிறுதானியத்திலிருந்து மதிப்பு கூடுதல் பற்றி அங்கன்வாடி பணியாளர்கள் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் கம்பு புட்டு, கேழ்வரகு அல்வா, தினை அரிசி முறுக்கு, சாமை அரிசி பணியாரம் மற்றும் குதிரைவாலி கொழுக்கட்டை தயாரிப்பது பற்றிய செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் இப்பயிற்சியில் பங்கேற்று பயனடைந்தனர். வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) முனைவர். வி. அரவிந்த் முகாமை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

# கோவை கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசியக் கருத்தரங்கு




**கோவை, மார்ச் 7-**

கோவை கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதுஅறிவியல் விலங்கியல் மற்றும் ஆய்வுத்துறை, வனவிலங்கு உயிரியல் துறை ஆகியன கொல்கத்தா, இந்திய விலங்கியல் ஆய்வகத்துடன் இணைந்து நடத்தும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை என்னும் பொருண்மையிலான இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கத்தின் தொடக்க விழா கல்லூரி கலையரங்கில் கல்லூரி செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ.வாசுகி தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகச் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் கோயம்புத்தூர், மாநில வன சேவைக்கான மத்திய அகாடமியின் தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் முதல்வர் வி. திருநாவுக்கரசு பங்கேற்றார். அவர் பேசுகையில் மேற்குத்தொடர்ச்சி மலையின் பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் மேலாண்மைக்குப் பெரும் சவாலாகக் கட்டடங்களின் பெருக்கம் அமைகிறது. வனவிலங்குகள் செல்லும் வழித்தடங்களில் கட்டடங்களைக் கட்டுவதால் மனித, விலங்கு மோதல் ஏற்படுவதுடன் விலங்குகளுக்கான உணவு, நீர் ஆகியவை கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது என்றும். மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்லுயிர்ப் பாதுகாப்பை உறுதிசெய்ய அரசின் கொள்கைகளும் தன்னார்வ அமைப்புக்களின் துணையும் மட்டும் போதாது என்றும் பொதுமக்களும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பின்னர் இக்கருத்தரங்கின் ஆய்வுச்சுருக்க நூலை வெளியிட்டார். அதனைத்தொடர்ந்து கொங்குநாடு கல்லூரி மற்றும் சென்னை பாம்பு பூங்கா அறக்கட்டளை இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அறக்கட்டளையின் நிர்வாகத் தலைவர் முனைவர் எஸ். பால்ராஜ் வாழ்த்துரை வழங்கினார். கேரள வன ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் பி.எஸ். ஈசா, மத்தியபிரதேச மாநில முன்னாள் தலைமை வனப் பாதுகாவலர் முனைவர் திலீப்குமார் ஆகியோர் உரையாற்றினார்கள். முன்னதாக, கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. சங்கீதா வரவேற்புரையாற்றினார். விலங்கியல் துறையின் பேராசிரியர் முனைவர் எஸ். இராஜா கருத்தரங்கின் முக்கியத்துவம் குறித்து பேசினார். விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் எஸ். பினுக்குமாரி நன்றியுரையாற்றினார். இதில் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆய்வுநிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றைச் சார்ந்த பேராளர்கள் மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சமயபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் அலகு குத்துதல் விழா







புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா என்னை கிராமம் மேலப்பட்டி கதவம்பட்டியில் இருந்து சமயபுரம் பாதயாத்திரையாக மூக்கையா குருசாமி தலைமையில் பால்குடம் அக்கினி சட்டி அலகு குத்துதல், காவடி எடுத்தும் ஏராளமான பக்தர்கள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் சமயபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு வேண்டுதலை செலுத்தினர்.

# கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு




**ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 7-**

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக்கழகம், வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்பில் ,"வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி 2.0" இடிஎஸ்டி குறித்து இரண்டு நாட்கள் சர்வதேச மாநாட்டை வேந்தர் முனைவர் கே.சஸ்ரீதரன் துவக்கி வைத்து , விவசாயம் "இந்தியாவின் முதுகெலும்பு" என்று பேசினார்."தற்போதைய விவசாய முறையில் ஐஓடி, செயற்கை நுண்ணறிவு புகுத்தி, உற்பத்தி அதிகரிக்க , புதுப்பிக்க வேண்டும்", என்று துணைத் தலைவர் முனைவர் எஸ்.சாசி ஆனந்த் தனது தலைமை உரையில் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார். துணைவேந்தர் முனைவர் எஸ். நாராயணன் மற்றும் பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். டீன், முனைவர் டி. சிவகுமார் வரவேற்றார்.

தலைமை விருந்தினர் ஜான்சி ,ஐகார் ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர். ஏ. அருணாச்சலம், பேசுகையில், "140 கோடிஇந்திய மக்களில் 12 கோடி பேர்(10விழுக்காடு) மட்டுமே சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள்" என்று எச்சரித்தார். "தற்போதைய விவசாயிகளின் பிரச்சினை பொருட்களின் விலை ஆகும்;விவசாயிகள் தவிர மற்ற எல்லோரும் எம்ஆர்பி வீதத்தை நிர்ணயிக்கிறார்கள்" என்றும் அவர் கூறினார். "நம் நாட்டில் 22% நிலம் முற்றிலும் வறண்ட நிலம், எனவே இந்தியா டான்சீனியா மற்றும் மலேசியாவிலிருந்து விவசாய பொருட்களை இறக்குமதி செய்கிறது. இந்தியாவில் எதிர்கால வாய்ப்புகள், ஸ்டார்ட் அப்கள், பேக்கேஜிங் தொழில்கள், குளிர் சேமிப்பு யூனிட்கள், இயற்கை உரங்கள், உணவுகள் போன்றவற்றில் உள்ளன," என்று முதன்மை விருந்தினர் வலியுறுத்தி "மாநாட்டு ஆராய்ச்சி மலரை" வெளியிட்டார். மலேசியா சயின்ஸ் பல்கலை க்கழகப் பேராசிரியர் முனைவர் ஸ்ரீ ரமணன் சுப்பிரமணியன் உயர்தரமான பயிர்கள் பற்றி பேசினார் வல்லுநர்கள் அமெரிக்கா இலியாஸ் பல்கலை சுனோஜ் ஷாஜகான் அமெரிக்கா ஓ ஆர் ஐ எஸ் இ நிறுவனம் ஈ தினகரன் கனடா குளோபல் உணவு பாதுகாப்பு நிறுவனம் சம்பத் பெருமாள் அமெரிக்கா என் டி எஸ் யு ஹீமேரா தஜின் அமெரிக்கா டெக்சாஸ் ஏ எம் பல்கலை மணிகண்டன் ராமசாமி தென்கொரியா டிஎன்ஏ நிறுவனம் ராகுல் ஷேலக்கே திருச்சி என் ஆர் சி நிறுவனம் ஜி பிரபு மற்றும் ஐ ரவி ஆகியோர் பேசினர் மொத்தம் 285 ஆராய்ச்சி கட்டுரைகள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் சமர்ப்பித்தனர் ஆராய்ச்சி துறை இயக்குனர் எம் பள்ளி கொண்ட ராஜசேகரன் வாழ்த்துரை வழங்கினார் பேராசிரியர் பி ஜேசு எட்வர்ட் ஜார்ஜ் நன்றியுரை வழங்கினார் துறை தலைவர்கள் வி கண்ணன் எஸ்.ஷாகீர் பேராசிரியர்கள் எஸ் கங்கா தரன் ஜி கலசுராமன் ஆகியோர் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் இணைந்து மாநாட்டின் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

### அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

# தமிழக அரசின் உதவித்தொகைகள் பற்றிய விழிப்புணர்வு முகாம்




**சிதம்பரம், மார்ச் 7–**

சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் அனைத்து உதவித்தொகைகள் பற்றிய சிறப்பு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம் அண்ணாமலைப் பல்கலைக்கழக அனைத்து துறை சமவாய்ப்பு பிரிவின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அண்ணாமலைப் பல்கலைகழக இணைப்பு கல்லூரிகளின் கல்வி உதவித் தொகை நோடல் அதிகாரிகளுக்கும் தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலத்துறையின் நிதி உதவியுடன் பல்கலைக்கழக மைய நூலக அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் குழு உறுப்பினர் பேராசிரியர் முனைவர். ஜி. அருட்செல்வி துவக்கி வைத்து தனது தலைமை உரையில் தமிழக அரசின் எண்ணற்ற உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை திட்டங்கள் பற்றிய இந்த விழிப்புணர்வு முகாம் நமக்கு அவசியமானது. அரசின் பல்வேறு உதவித்தொகை திட்டங்கள் பற்றி நாம், தெளிவு பெற்றால்தான் இதை மாணவர்களிடம் கொண்டு செல்ல முடியும் ஆகவே தான் இந்த விழிப்புணர்வை நோடல் அதிகாரி மற்றும் ஒருங்கிணைப் பாளர்களுக்கு தரவேண்டிய அவசியம் நமக்கு உள்ளது, என்று பேசினார்.

இவ்விழாவில் சிறப்புரை ஆற்றிய பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். வி.பிரகாஷ் அவர்கள் பேசுகையில் தமிழகத்தில் முதன்முதலாக நமது பல்கலைக்கழகம்தான் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர்களுக்கு மற்றும் இணைப்பு கல்லூரிகளைச் சார்ந்த நோடல் அதிகாரிகளுக்கு இதுபோன்ற முகாம் நடத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர். மேலும், தகுதி இருந்தும் எந்த ஒரு மாணவனும் உதவித்தொகை பெறாமல் இருக்கக் கூடாது என்ற தமிழக அரசின் நோக்கங்களை நிறைவேற்றவே இப்படி ஒரு முகாம் நடைபெறுகிறது என்றார்.

இவ்விழாவில் பல்கலைக்கழக கல்வி மேம்பாட்டு குழுவின் புல முதல்வர் முனைவர் கோதைநாயகி சென்னை ஆதிதிராவிடர் நலத்துறையைச் சார்ந்த ஞி. சரவணன், ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக பல்கலைக்கழக சமவாய்ப்பு பிரிவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் நோடல் அதிகாரி முனைவர் ஜி.தெய்வசிகாமணி வரவேற்று பேசுகையில் மாணவர்களின் நலன் காக்கவே இப்பல்கலைக்கழகம் பெரும் முயற்சி எடுத்து இப்பயிற்சி முகாமை நடத்துகிறது. இதன் பொருட்டு இப்பல்கலைக்கழகத்தில் அதிக மாணவர்கள் உதவித்தொகை பெற்று வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. மேலும், தொடர்ந்து மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவே நாங்கள் பெருமுயற்சி செய்கிறோம் என்றார். இவ்விழாவில் கலைப்புல முதல்வர் முனைவர். விஜயராணி, பொறியியல் புல முதல்வர். சி.கார்த்திகேயன், கல்வியல் புல முதல்வர் குலசேகரபெருமாள்பிள்ளை, அறிவியல் புல முதல்வர் முனைவர் ஶ்ரீராம், தொலைதூர கல்வி இயக்குனர் சீனிவாசன், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக வணிகவியல் துறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுந்தரராஜ் நன்றி கூறினார். இவ்விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இணைப்புக் கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் என சுமார் 200 பேர் கலந்து கொண்டார்கள். இவ்விழாவினை "பி" பிரிவு ஊழியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## மணவெளி தொகுதியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இஸ்திரி வண்டியை சபாநாயகர் செல்வம் வழங்கினார்







**புதுச்சேரி, மார்ச் 7–**

புதுச்சேரி அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் சலவை தொழிலாளிகளுக்கு இலவச இஸ்திரி பெட்டி மற்றும் தள்ளுவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மணவெளி தொகுதியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை தலைவருமான செல்வம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் சுகுமாரன், கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார், ஞானசேகரன், சக்திவேல், டி.என். பாளையம் கூட்டுறவு சங்க தலைவர் சுகாதியா, திருமால் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## காரைக்கால் அடுத்த கோட்டுச்சேரியில் வடிகால் வசதிகள், சாலை அமைப்பதற்கு பூமி பூஜை

### சந்திரபிரியங்கா எம்எல்ஏ துவக்கி வைத்தார்



**காரைக்கால், மார்ச் 7–**

காரைக்காலை அடுத்த கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில், ரூ.20 லட்சத்து 20 ஆயிரத்து 605 செலவில், வடிகால் வசதிகள் மற்றும் சாலை அமைப்பதற்கு பூமி பூஜை நேற்று சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் சந்திர பிரியங்கா எம்எல்ஏ துவக்கி வைத்தார்.

காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கோட்டுச்சேரி டாக்டர் ஆனந்து அவென்யூ பகுதியில், நெடுங்காடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூபாய் 15,91,393/ மதிப்பீட்டில் புதிதாக வடிகால் வசதிகள் உடைய சாலை அமைப்பதற்கும், கோட்டுச்சேரி சமாது சந்து பகுதியில் ரூபாய்4,29,214/ மதிப்பீட்டில் புதிதாக தார் சாலை அமைப்பதற்கு நேற்று காலை பூமி பூஜை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா தலைமை தாங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் நகராட்சி செயற்பொறியாளர் முத்துசிவம், கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து மேலாளர் துரைக்கண்ணு, கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வேல்ராம்பட்டு பகுதியில் ரூ.59.50 லட்சம் மதிப்பீட்டில் 2 அங்கன்வாடி அமைக்க பூமி பூஜை

### சம்பத் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்



**புதுச்சேரி, மார்ச் 7–**

புதுச்சேரி, முதலியார்பேட்டை தொகுதியைச் சார்ந்த வேல்ராம்பட்டு கிராமத்தில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டுவதற்காக புதுச்சேரி அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறையால் ரூ.59.50 லட்ச ரூபாய்க்கு அரசாணை வழங்கப்பட்டு, புதுச்சேரி பொதுப்பணித்துறை மூலம் 50.62 லட்ச ரூபாய்க்கு அக்கட்டிடம் கட்டுவதற்கு பணியாணை புதுச்சேரியைச் சேர்ந்த யாழினி என்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான பூமி பூஜை விழாவில் முதலியார்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சம்பத், கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறையின் இயக்குநர் முத்து மீனா, பொதுப்பணித்துறை, கட்டிடங்கள் மற்றும் சாலைகள் (வடக்கு) கோட்ட செயற்பொறியாளர் சந்திரகுமார், உதவிப்பொறியாளர் சீனிவாசராம், இளநிலைப் பொறியாளர் தேவேந்திரன் மற்றும் ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பேராசிரியர் அன்பழகன் திருவுருவப்படத்திற்கு மஸ்தான் எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை

**செஞ்சி, மார்ச் 7–**

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர திமுக சார்பில் இனமான பேராசிரியரின் 5வது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியரின் திருவுருவப்படத்திற்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் தொடர்ந்து தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் உறுதிமொழியை அனைவரும் ஏற்றனர்.



நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலஷ்மி செயல் மணி, நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், தொண்டரணி பாஷா, பிரதிநிதி அய்யாதுரை, நிர்வாகிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## விபத்தில் பலியான தலைமை காவலர் உடல் 21 குண்டு முழங்க தகனம் செய்யப்பட்டது



காரைக்காலை அடுத்த திருநள்ளாறில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியான, காரைக்கால் போக்குவரத்து காவல் நிலைய தலைமை காவலர் அசோக் குமார் உடலுக்கு, காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில், நேற்று 21 குண்டு முழங்க போலீஸ் மரியாதையோடு தகனம் செய்யப்பட்டது.

# அரியாங்குப்பம் தொகுதி என்ஆர் காங்கிரஸ் இளைஞரணி தலைவராக மணிகண்டன் நியமனம்



**புதுச்சேரி, மார்ச் 7-**

புதுச்சேரி என்ஆர் காங்கிரஸ் இளைஞர் அணி தொகுதி தலைவர்கள் முதல் கட்டமாக சட்டமன்ற உறுப்பினரும் என்ஆர் காங்கிரஸ் கட்சி இளைஞர் அணி மாநில தலைவருமான கேஎஸ்பி ரமேஷ் அறிவித்துள்ளார். அதன்படி அரியாங்குப்பம் தொகுதி என்ஆர் காங்கிரஸ் இளைஞரணி தலைவராக ஆர்.வி. மணிகண்டன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து ஆர்.வி.மணிகண்டன் மாநில இளைஞரணி தலைவர் கேஎஸ்பி ரமேஷ் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து நன்றி தெரிவித்து, வாழ்த்து பெற்றார். உருளையன்பேட்டை தொகுதி தலைவர் ஓம் சக்தி ரமேஷ் மற்றும் அரியாங்குப்பம் தொகுதி செயலாளர் செல்வகுமார் மற்றும் இளைஞர்கள் பலர் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டையில் மும்மொழி கொள்கையை ஆதரித்து பா.ஜ.கவினர் கையெழுத்து இயக்கம்



**புதுக்கோட்டை, மார்ச் 7-**

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் பா.ஜ.கவினர். புதிய மும்மொழி கொள்கையை ஆதரித்து பொதுமக்கள். மற்றும் மாணவ மாணவியர்களிடம் கையெழுத்து பெற்று கோஷம் போட்டனர். மேற்கு மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய செயற்குழு உறுப்பினர் புரட்சி கவிதாசன். மாவட்ட பொருளாளர் முருகானந்தம் மாநில ஓ.பி.சி. பிரிவு டி.எஸ்.பாண்டியன்.சீனிவாசன், கிரீன்குட்டி, ஜீவானந்தம் மற்றும் பாஜக பொறுப்பாளர்கள் கலந்துகொண்டார்

# தேசிய மக்கள் கட்சியின் புதுச்சேரி தலைவராக சித்தானந்தம் நியமனம்



**புதுச்சேரி, மார்ச் 7-**

புதுச்சேரி அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தலை சந்திக்க உள்ளது. இதனையடுத்து புதுச்சேரியில் உள்ள அரசியல் கட்சிகள், கட்சியினர் மட்டுமின்றி வெளிமாநில கட்சிகளும், தேசிய அளவில் உள்ள கட்சிகளும் புதுச்சேரி சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகின்றன. அதற்காக பொறுப்பாளர்களை தயார் செய்து வருகின்றன. அந்தவகையில் (நேஷ்னல் பீப்புள்ஸ் பார்ட்டி) தேசிய மக்கள் கட்சியும் மக்கள் பணிக்காக புதுச்சேரியில் களம் இறங்க தயாராகி வருகின்றது.

இதற்காக கட்சியின் மாநில பொறுப்பை ஒப்படைக்க பல்வேறு அரசியல் பிரமுகர்களிடமும், சமூக ஆர்வலர்களிடமும் கலந்தாலோசனை நடத்தியது. அதில் புதுச்சேரியின் சமூக ஆர்வலரும், புதுச்சேரி சமூக அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவருமான ஆ.சித்தானந்தம் அவர்களை தேசிய மக்கள் கட்சியின் புதுச்சேரி தலைவராக நியமிக்க தேர்வு செய்துள்ளது.

சித்தானந்தம் புதுச்சேரியில் பல ஆண்டுகளாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண குரல் எழுப்பி வருவதுடன், பொதுமக்கள் நலனிற்காக செயல்படும் பல்வேறு சமூக, தன்னார்வ அமைப்புகளுக்கும் நிதியுதவி அளித்து சமூகப்பணிகளையும் ஊக்குவித்து வருகின்றார்.


குறிப்பாக அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு உத்தரவிட்டு கொண்டு இருக்காமல், நேரடியாக களத்தில் இறங்கி சாமானிய மக்களுக்காக தொடர்ந்து சிறந்த முறையில் களப்பணி ஆற்றி வருகின்றார். எனவே அவருக்கு கொடுத்தால் கட்சி புதுச்சேரியில் வளர்ச்சி பெறும் என்ற நோக்கில் (நேஷ்னல் பீப்புள்ஸ் பார்ட்டி) தேசிய மக்கள் கட்சி புதுச்சேரியின் தலைமை பொறுப்பை சித்தானந்தத்திற்கு வழங்கியுள்ளது.

# வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்



மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையி திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பக்தவச்சலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஸ்பாதேவி ஆகியோர் உள்ளனர்.

# ஆசிரியர் தகுதி தேர்வு நடைபெறவுள்ள தேர்வு மையத்தினை ஆட்சியர் ஆய்வு




திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், போளூர் வட்டம், மொடையூர் அண்ணாமலை பொறியியல் கல்லூரியில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு மாநில தகுதி தேர்வு நடைபெறவுள்ள மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆதிதிராவிடர் நலக்குழு கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, உதவி காவல் கண்காணிப்பாளர் மரு.மதன் ஆகியோர் உள்ளனர்.

# ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தகுதித் தேர்வை ஆட்சியர் ஆய்வு



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, திருச்செங்கோடு, கே.எஸ்.ஆர் கல்லூரியில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தமிழ்நாடு மாநில தகுதித் தேர்வு (TNSET) நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# மொழிக்கொள்கையில் தமிழ்நாடு தெளிவாக உள்ளது: மு.க.ஸ்டாலின்



# அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கட்சியில் இருந்து நீக்கம்

# தமிழக மீனவர்கள் 14 பேர் கைது


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 7-3-2025 வெள்ளிக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்